TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8092319

1. District : Madurai
மாவட்டம்
PS: V&AC
காவல்நிலையம்
Year: 2020
ஆண்டு
FIR No.: 1/20
மு.த.அ. எண்
Date: 06.01.2020
நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: as ammended by
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: PC (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from 02.01.2020 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 18.15 hrs Time to : 21.30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 06.01.2020 Time : 16.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) - do - Time : - do -
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : written type.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 2 kms, South East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : Joint commissioner (state tax) Madurai Division and Intelligence commercial tax Building, Dr. Thangaraj Salai, k.k.Nagar, madurai.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. A. Ashok kumar
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : A. Iyyasamy.
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 14.2.1985
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspection cell Inspector
தொழில்
(g) Address : District Inspection Cell office, madurai.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. B. Sivaharini, Age 52/2020, Joint commissioner, (state tax), madurai Division, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
This case was Registered after getting instruction from the Superior officer, Hence delay.

(Attach separate sheet if necessary) —

—

—

Separate sheet with typed matter in tamil from page. No. 3 to 5 are enclosed herewith.

R. A. Kannan Inspector
VAAC, Madurai.

given to the Complainant /

எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்

06/01/2020

Signature of the Officer in-charge, Police Station
அலுவலரின் ஒப்பம்

K. Kumaraguru,
Inspector of Police,
VAAC, Madurai.

06/01/2020
16.45 Hrs

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

இன்று 06.01.2020-ம் தேதி நான் (K.குமரகுரு) மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது ஆய்வுக் குழு ஆய்வாளர் திரு.அ. அசோக்குமார் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் அளித்த புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு காவல் துணை கண்காணிப்பாளர் என்னிடம் கொடுத்ததை பெற்று, அந்த புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களைப் பெற்றுப் பார்வையிட்டதில் புகார் மனுவில் உள்ள விவரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு. அ.அசோக்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை, பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண். ஐ1/314/2020, நாள் : 06.01.2020. அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - இணை ஆணையர் (மாநில வரி) மற்றும் இணை ஆணையர் (மாநில வரி), நுண்ணறிவு, மதுரை கோட்டம், மதுரை அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தொடர்பாக. பார்வை : திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்புகள், நாள் : 02.01.2020. மதுரை, டாக்டர் தங்கராஜ் சாலையில் உள்ள தென்வடல் மெயின் ரோட்டின் மேற்கே அமைந்துள்ள வணிகவரி அலுவலக வளாகத்தின் உள்ளே 5 மாடி கட்டிடத்தில் முதல் தளத்தில் உள்ள இணை ஆணையர் (மாநில வரி), மதுரை கோட்டம், மதுரை மற்றும் இரண்டாம் தளத்தில் உள்ள இணை ஆணையர் (மாநில வரி), நுண்ணறிவு, மதுரை கோட்டம், மதுரை ஆகியோர் புத்தாண்டை முன்னிட்டு தங்கள் மேற்பார்வையில் பணியாற்றும் அலுவலர்களிடம் புத்தாண்டு அன்பளிப்பாக லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மாலை சுமார் 18.15 மணி முதல் 21.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகர்கள் உதவியுடன் நடத்தப்பட்டது. இணை ஆணையர் (மாநில வரி) மற்றும் இணை ஆணையர் (மாநில வரி), நுண்ணறிவு, மதுரை கோட்டம், மதுரை ஆகிய அலுவலங்களில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வில் மேற்படி வணிக வரி அலுவலக வளாக கட்டிடத்தின் முதல் மாடியில் இணை ஆணையர் (மாநில வரி) மதுரை கோட்டம், மதுரை அவர்களின் அலுவலகத்திற்கு செல்லும் வழியில் முதல் தளத்தில் நடைபாதையில் நின்றிருந்த திரு. சந்திரசேகரன் அவர்களை அழைத்துக்கொண்டு திருமதி. சிவஹரிணி,

இணை ஆணையர் (மாநில வரி), மதுரை கோட்டம், மதுரை அவர்களது அலுவலக அறையில் திடீர் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது திருமதி. சிவஹரிணியின் அலுவலக மேஜையின் மீது இருந்த பிரவுன் நிற லெதர் பேக்கில் உள்ள பொருட்களின் விபரம் குறித்து கேட்ட போது, அவர் சற்று பதற்றமடைந்து உள்ளே இருந்த பொருட்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில், சிறிய வட்ட வடிவ சந்தன கலர் நகை டப்பாவை எடுத்து ஆஜர் செய்தார். அந்த டப்பாவில் திண்டுக்கல் வெள்ளைச்சாமி ஜீவல்லர்ஸ் என்ற நகை கடையின் முகவரி அச்சிடப்பட்டிருந்தது. டப்பாவின் உள்ளே வட்ட வடிவ தங்க காசு குங்கும நிற சிறிய காகிதத்தில் சுற்றப்பட்டு இருந்தது. அதனை அலுவலகத்திலிருந்து கொண்டு சென்றிருந்த சிறிய கையடக்க எடை கருவியில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் அளவிட்ட போது 4 கிராம் எடை இருந்தது. அதன் ஒரு புறத்தில் சிறிய மனித தலை உருவமும் அதனருகில் 916 என்றும், அச்சிடப்பட்டு அதனை சுற்றி ஆங்கில எழுத்துக்கள் அச்சிடப்பட்டிருந்தன. மற்றொரு புறத்தில் குதிரையின் மீது வீரன் அமர்ந்திருக்கும் படமும், அதன் கீழே 1913 எனவும் அச்சடிக்கப்பட்டிருந்தது. அந்த தங்க காசு குறித்து திருமதி. சிவஹரிணியிடம் கேட்ட போது, திண்டுக்கல் துணை ஆணையர் திருமதி. சுபாஷினி என்பவர் 02.01.2020 தன்னை அலுவலகத்தில் சந்தித்து புத்தாண்டு அன்பளிப்பாக கொடுத்ததாக தெரிவித்தார். பின்னர், திருமதி.சிவஹரிணி, கத்தையாக பணத்தை ஆஜர் செய்ததை நான் வாங்கி எண்ணிப் பார்த்ததில் ரூ.10,000/- (20 ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள்) இருந்தது. அவரிடம் அந்த பணம் குறித்து கேட்ட போது, தேனி உதவி ஆணையர் திரு. பாபு என்பவர் 02.01.2020-ம் தேதி தன்னை அலுவலகத்தில் சந்தித்து புத்தாண்டு அன்பளிப்பாக கொடுத்ததாக தெரிவித்தார். மேலும், ஒரு பிரவுன் நிற கவரில் வைக்கப்பட்டிருந்த ரூ.10,000/- (2 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 12 ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள்) குறித்து இணை ஆணையர் திருமதி. சிவஹரிணியிடம் கேட்ட போது, அந்த பணத்தை, தனது அலுவலகத்திற்கு 02.01.2020-ம் தேதி வந்த மதுரை காமராஜர் சாலை உதவி ஆணையர் திருமதி. ராதிகா என்பவர் புத்தாண்டு அன்பளிப்பாக தனக்கு கொடுத்ததாக கூறினார். மேலும், மற்றொரு பிரவுன் நிற கவரில் வைக்கப்பட்டிருந்த ரூ.5,000/- (10 ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள்) குறித்து அவரிடம் கேட்ட போது, அந்த பணத்தை, தனது அலுவலகத்திற்கு 02.01.2020-ம் தேதி வந்த திண்டுக்கல் உதவி ஆணையர் திருமதி. உதயராணி என்பவர் புத்தாண்டு அன்பளிப்பாக கொடுத்ததாக கூறினார். மேலும், அவரது

லெதர் ஹேண்ட் பேக்கில் இருந்து ஆஜர் செய்த பணம் ரூ. 2,100/- குறித்து கேட்ட போது, அது தனது சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட விபரங்களை இணை ஆணையர் திருமதி. சிவஹரிணி அவர்கள் என் முன்னிலையில் எழுத்துப்பூர்வமான வாக்குமூலமாக எழுதி கொடுத்தார். எனவே, மேற்கூறிய அனைத்து அன்பளிப்பு பணம் மொத்தம் ரூ.25,000/-, பணம் வைக்கப்பட்டிருந்த இரண்டு பிரவுன் நிற கவர்கள், 4 கிராம் எடையுள்ள தங்க காசு மற்றும் அதனை வைத்திருந்த வட்ட வடிவ சந்தன கலர் பிளாஸ்டிக் டப்பாவும் கைப்பற்றப்பட்டன. மேலும் திருமதி.சிவஹரிணி, திரு. சந்திரசேகரன் ஆகியோரை நான் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சோதனை முடிவில், தொடர் விசாரணைக்காக கீழ்கண்ட ஆவணமான இணை ஆணையர் (மாநில வரி) அலுவலகம், மதுரைக் கோட்டம், மதுரை - 20 அலுவலகத்தின் மேலாளர் பிரிவு - 2020 வருடத்தின் வருகைப் பதிவேட்டை திரு. சந்திரசேகரன் அவர்கள் ஆஜர் செய்தார். தொடர்ந்து, இரவு சுமார் 19.00 மணியளவில், மேற்படி அலுவலகத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள இணை ஆணையர் (மாநில வரி), நுண்ணறிவு, மதுரை கோட்டம், மதுரை என்பவரின் அலுவலகத்தில் இருந்த திருமதி. ரசியா மதுரை கோட்ட மாநில வரி, நுண்ணறிவு, இணை ஆணையர் அவரது அலுவலக அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அறையில் A.R.S.விஜயராம் அவர்கள் உடனிருந்தார். அவரது மேஜையில் இருந்த சந்தன கலர் ஹேண்ட் பேக்கில் உள்ள பொருட்களின் விபரம் குறித்து கேட்ட போது, அவர் உள்ளே இருந்த பொருட்களை எடுத்து காண்பித்தார். அதில், பழநி பாபா என அச்சிடிக்கப்பட்ட மணி பர்ஸில் ஒரு கத்தையில் ரூ.13,500/-ம் மற்றொரு கத்தையில் ரூ.2,950/-ம், மூன்றாவது கத்தையில் ரூ.230/-ம் இருந்தது. வெள்ளை நிற கவரில் இருந்த பணத்தை எண்ணிப்பார்த்த போது, ஒரு கத்தையில் ரூ.22,350/-ம், மற்றொரு கத்தையில் ரூ.1,810/-ம் இருந்தது. அது குறித்து திருமதி. ரசியா-விடம் கேட்ட போது, அவர் மேற்படி ரூ.22,350/- மற்றும் ரூ.1,810/- ஆகியவை தனது தங்கை கடந்த 21.12.2019-ம் தேதி விடுமுறைக்கு வந்து தங்கையின் மகள் திருமணத்திற்கு, பழைய நகையை கொடுத்ததில் இரண்டு காதணிகள் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டதால் மீண்டும் பணத்தை நகை கடையில் கொடுத்து மேற்படி காதணிகளை பெறுவது தொடர்பாக மதுரை ஜெயபிரபா ஜீவல்லர்ஸ்-க்கு கொடுக்க வேண்டிய பணம் என்று கூறினார். மேலும் அவர் வைத்திருந்த வெள்ளை கவரில் மேற்படி நகை தொடர்பாக அனைத்து குறிப்புகளும்

இருந்தது. அதுதவிர, அவரது பர்ஸ்சிலிருந்த ரூ.16,680/- குறித்து கேட்ட போது, கடந்த 19.12.2019 அன்று தனது KVB வங்கி கணக்கிலிருந்து எடுத்த ரூ.27,500/-ல் தான் செலவழித்தது போக மீதியுள்ள பணம் என்றும் கூறினார். எனவே திருமதி. ரசியா அவர்களது பேக்கில் இருந்த மொத்த பணம் ரூ.40,840/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட விபரங்கள் குறித்து இணை ஆணையர் திருமதி. ரசியா அவர்கள் என் முன்னிலையில் எழுத்துப்பூர்வமான வாக்குமூலமாக எழுதி கொடுத்தார். மேலும், திடீர் இணை ஆய்வின் போது இணை ஆணையர் (மாநில வரி), நுண்ணறிவு , மதுரை கோட்ட அலுவலகத்தில் இருந்த திரு.A.R.S. விஜயராம், வணிகவரி அலுவலர், அட்ஜூடிகேஷன் செல், இணை ஆணையர் (மாநில வரி) அலுவலகம், நுண்ணறிவு , மதுரை கோட்டம், மதுரை என் முன்னிலையில் எழுத்துப்பூர்வமான வாக்குமூலமாக எழுதி கொடுத்தார். மேலும் சோதனை முடிவில், தொடர் விசாரணைக்காக, இணை ஆணையர் (மாவ) (நுண்ணறிவு) அலுவலகம், மதுரை - 20 அலுவலகத்தின் 2020 வருடத்தின் வருகைப்பதிவேட்டை, மேற்படி அலுவலக உதவியாளர் திரு. ராஜேஸ்வரன் அவர்கள் ஆஜர் செய்தார். மேற்படி 2 ஆவணங்களுடன் திருமதி.சிவஹரிணி, இணை ஆணையர் (மாநிலவரி), மதுரை கோட்டம், மதுரை அவர்கள் ஆஜர் செய்த லஞ்சப்பணம் ரூ.25,000/- வைக்கப்பட்டிருந்த பிரவுன் கலர் கவர்கள் இரண்டு மற்றும் திண்டுக்கல் வெள்ளைச்சாமி ஜீவல்லரி என அச்சடிக்கப்பட்ட சந்தன கலர் டப்பா மற்றும் அதிலிருந்த 4 கிராம் தங்க காசு ஆகியவை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் திருமதி.சிவஹரிணி திரு.சந்திரசேகரன், திருமதி.ரசியா மற்றும் திரு.A.R.S.விஜயராம் ஆகியோரை நான் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திடீர் இணை ஆய்வு குறிப்புரை இரவு 18.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்புகள், நாள் 02.01.2020 உடன் சம்பவ இடத்தில் இருந்த இணை ஆணையர் திருமதி.சிவஹரிணி, மாநில வரி அலுவலர் திரு.சந்திரசேகரன், இணை ஆணையர் திருமதி.ரசியா மற்றும் மாநில வரி அலுவலர் திரு.A.R.S.விஜயராம் ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றின் அசல்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.25,000/- மற்றும் பணம் வைக்கப்பட்டிருந்த பிரவுன் கலர் கவர்கள் இரண்டு மற்றும் திண்டுக்கல் வெள்ளைச்சாமி ஜீவல்லரி என அச்சடிக்கப்பட்ட சந்தன கலர் டப்பா மற்றும் அதிலிருந்த 4 கிராம் தங்க காசு மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை இத்துடன்

இணைத்துள்ளேன். எனவே, புத்தாண்டை முன்னிட்டு திருமதி.சிவஹரிணி அவர்கள் மேற்பார்வையில் பணியாற்றும் அலுவலர்களிடம் புத்தாண்டு அன்பளிப்பாக லஞ்சம் பணம் ரூ.25,000/- மற்றும் 4 கிராம் தங்க காசு ஒன்று பெற்ற திருமதி.சிவஹரிணி, இணை ஆணையர் (மாநிலவரி), மதுரை கோட்டம், மதுரை அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க இந்த அறிக்கையை சமர்ப்பிக்கிறேன். ஒப்பம் (அ. அசோக்குமார்), ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் நாள் : 02.01.2020. 2) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் நான்கு. 3) ரொக்கத் தொகை ரூ.25,000/- மற்றும் 4 கிராம் தங்க காசு ஒன்று. 4) பிரவுன் கலர் கவர்கள் இரண்டு. 5) திண்டுக்கல், வெள்ளைச்சாமி ஜீவல்லரி என்று அச்சடிக்கப்பட்ட நகை டப்பா ஒன்று. 6) 2020-ம் ஆண்டிற்கான வருகை பதிவேடு இரண்டு. 16.00hrs/06.01.2020 received this report from Tr.A.Ashokkumar, Inspection cell Inspector, O/o. the Inspection Cell, Madurai. Inspector Tr.K.Kumaraguru, to register a Regular Case on the above report and also the FIR and connected files to be hand over to Tr.A.Kannan, for conducting further investigation. (sdxxxx) M.Sathyaseelan, 06.01.2020, DSP, V&AC, Madurai.

Sir, received the report, along with documents and registered a Regular Case in Madurai V&AC Cr.No.1/2020 u/s 7 of P.C. Act, 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 06.01.2020 at 16.30hrs. (sdxxxx) K.Kumaraguru, 06.01.2020, Inspector of Police, V&AC, Madurai.

The original FIR along with the report of Inspection Cell Inspector, dated 06.01.2020 and Joint surprise check proceedings dated 02.01.2020 are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of P.C. Act Cases, Madurai and other copies were sent to the officers concerned.

6/1/2020
(K.Kumaraguru)
Inspector of Police,
V&AC, Madurai.